பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஆவணி 13 (29—8—72) செவ்வாய் வெளியூர்: ஆவணி 14 (30—8—72) புதன் [இதழ்: 64

தஞ்சை மாவட்டத்தில் நெல் உலர்த்தும் நிலையங்கள்

"இந்திய உணவுக் கார்ப்பரேஷன், தஞ்சை மாவட்டத்தில் இயந்திரங்கள் மூலம் நெல் உலர்த்தும் 30 நிலையங்களை அமைத்திருக்கிறது; வயலிலிருந்து வரும் நெல்லை ஈரம்போக உலர்த்துவதற்குப் பயன்படும் இவற்றின் உண்மையான நிலை, அறுவடைக் காலத்தில் இருக்கக்கூடிய மழையைப் பொறுத்ததாகும்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் வி. மாயவனின் கேள்விக்குப் பதிலளிக்கையில் வேளாண்மை இணையமைச்சர் தெரிவித்தார்.

தொழிற் சங்கங்களில் தி. மு. கழகம் ஈடுபாடு

பொருளற்ற குற்றச்சாட்டு--அமைச்சர் மாதவன் வியப்பு

'ஒதுங்கியிருக்க வேண்டும்' என்ற தொழிற் சங்கத் தலைவரின் கூற்றுக்குப் பதில்

திருச்சி, ஆக. 29—

"தொழிற் சங்கங்களில் தி. மு. கழகம் ஈடுபடுவதைக் கண்டு, எல்லா அரசியல் கட்சிகளும் ஏன் நடுங்குகின்றன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தொழிற் சங்கத்தைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்த அனைத்து அரசியல் கட்சிகளும் போட்டி போடுகின்றன; இதனால் தொழில் அமைதி சீர்குலைந்து தமிழ்நாட்டின் முன்னேற்றமும் பாதிக்கப்படுகிறது; 'தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர்' என்ற முறையில் நான் கவலைப்படுவதெல்லாம் இதுபற்றித்தான்!"

என்று தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்--சட்டம் இயற்றவும் உறுதி கூறினோம்

அண்மையில் மதுரையில நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசு மாநாட்டில்--அதன் தலைவர் ஜி. இராமானுசம் பேசுகையில், 'தி. மு. கழகம தொழிற் சங்கப் பணியிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டும்' என்று கூறியிருப்பதைப் பற்றி அமைச்சர் மாதவன் வியப்புத் தெரிவித்தார்; 'திரு. இராமானுசத்தின் கூற்று பொருளற்றது' என்று கூறிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:—

"முன்னாள் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என்ற முறையில், 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்ற கொள்கையை வலியுறுத்தி வந்திருப்பதில் நான் முதன்மையானவனாவேன்.

டெல்லியில் நானும்--முதலமைச்சர் கலைஞரும் தலைமையமைச்சரைச் சந்தித்துப் பேசியபோதுகூட, 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்ற கொள்கையை எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொண்டால் இதற்காக ஒரு சட்டம் இயற்றவும் தமிழ்நாடு தயாராக இருக்கிறது' என்பதைத் தெரிவித்திருக்கிறோம்.

இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசில்கூட இரு பிரிவுகள் இருந்துவருவது கவனிக்கத்தக்க ஒன்றாகும்."

மதுரை மாநாட்டில் தெரிவித்தகருத்து பற்றி விளக்கம்

அண்மையில் மதுரை மாநாட்டில் பேசுகையில், 'மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் தொழில் வளர்ச்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, மாநில உரிமைகளை ஆக்கிரமித்து வருவதாக'த் தாம் தெரிவித்த கருத்துக்கும் செய்தியாளரிடம் அமைச்சர் மாதவன் விளக்கமளித்தார்; அதுபற்றி அவர் கூறியதாவது:—

"மாநில அரசு ஒரு தொழிலைத் துவக்க விரும்பினால் அதன் மீது முழுக் கட்டுப்பாட்டையும் செலுத்த மத்திய அரசு முனையக்கூடாது" என்பதே எனது கருத்தாகும்.

உதாரணத்துக்கு, மாநில அரசு ஒரு டயர் உற்பத்தித் தொழிற்சாலையைத் துவக்குவதென்று முடிவு செய்தபோது, திரு. சுப்பிரமணியம், நாடு முழுவதுக்குமாக டயர் வாரியம் ஒன்றை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டு வருவதாகத் தெரிவித்ததாகக் கூறப்பட்டது; இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் 'தமிழக அரசு அமைக்கத் திட்டமிட்டிருக்கும் டயர் தொழிற்சாலை, நாடு முழுவதுக்குமான டயர் வாரியத்தின் ஒரு இணைப் பிரிவாக இயங்க வேண்டியிருக்கும்' என்பதுதான்; அதாவது--மற்றொரு பொருளில் கூறுவதானால்--ஒரு மாநில அரசு துவக்கும் நிறுவனத்தின் முழு மேல் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்துவரும் என்பதே ஆகும்; இதை மட்டும்தான் நான் எதிர்த்து வருகிறேன்."

வேறு குரலில் பேசும் நிலை ஏன்?

திரு. இராமானுசம் அவர்கள் தனிப்பட்ட முறையில் என்னிடம் பேசியபோதுகூட, 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்ற கொள்கையை ஒப்புக்கொண்டார்; ஆனால், மதுரை மாநாட்டில் அவர் வேறு குரலில் பேசியிருப்பது வியப்பையே அளிக்கிறது.

அண்ணல் காந்தியின் அணியில் இருந்த பெரியவரின் ஆத்திரம்--கழகத் தோழர்களுக்குக் கலைஞர் தீட்டும் மடல்

'நரகல் நடை'ப் பேச்சாளர்கள் நன்றாகப் பாயட்டும்--நாட்டு மக்கள் அவர்களைத் தெளிவாக உணரட்டும்

தாயே எட்டடி பாய்கின்றபோது குட்டிகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

பண்பாடு பிறழாத ஒழுங்கு முறை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திற்கு ஏமாற்றமே பதிலாகக் கிடைக்கிறது

"விடுதலை நாள் வெள்ளி விழாவில் சென்னைக் கூட்டத்தில் கலந்துகொண்டால் சிறப்பாக இருக்கும்--என்று காமராசரை அழைத்தேன்; 'அந்த நாளில் டில்லியில் கலந்துகொள்ளப் போகிறேன்' என்று அவர் கூறிவிட்டார்.

"தலைமையமைச்சர்களை ஒரு காலத்தில் உருவாக்கிடும் தகுதி பெற்றிருந்த அந்தத் தலைவருக்கு டில்லியில் அப்படி ஒன்றும் அன்றையத்தினம் பெரிய நிகழ்ச்சி ஏதுமில்லை.

"சென்னையில் நடைபெறும் விழாவில் அவர் கலந்துகொள்ளவில்லையே--என்று நான் வருத்தப்பட்டேன்; அதைச் சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் மிகுந்த மரியாதையோடு வெளியிட்டேன்; 'என் கௌரவத்தைப் பற்றிப் பேச நீ யார்' என்று ஆத்திரத்தோடு கேட்கிறார்--அண்ணல் காந்தியின் அணியில் இருந்த அந்தப் பெரியவர்!

"அவரது கட்சியிலுள்ள நரகல் நடைப் பேச்சாளர்களைப் பற்றியும்--அவர்கள் பேசிவரும் சில நாகரீகமற்ற பேச்சுக்கள் பற்றியும் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும்போது அவரிடத்திலே எடுத்துக்கூறி, 'தமிழ்நாட்டு அரசியல் மேடைகள் அனைத்திலும் ஒரு பண்பாடு பிறழாத ஒழுங்கு முறை ஏற்படுத்த வழி காண வேண்டும்' என்று எண்ணியிருந்தேன்; ஆனால் எனக்குப் பெரிய ஏமாற்றம்!

"'தாய் ஓரடி பாய்ந்தால் குட்டி எட்டடி பாயும்' என்பது பழமொழி; ஆனால், தாயே எட்டடி பாய்கின்றபோது குட்டிகள் எத்தனை அடி பாயும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை! நன்றாகப் பாயட்டும்! நாடு அவர்களை மேலும் தெளிவாக உணரட்டும்!"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், கழகத் தோழர்கட்குத் தீட்டியுள்ள மடலில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்; 'தாயே எட்டடி என்றால்......' என்ற தலைப்பில் எழுதியுள்ள அக்கட்டுரையில், மதுரை மாவட்ட தி.மு.க. மாநாடு பற்றி எழுதிவந்த கட்டுரையைத் தொடர்ந்து எழுத இயலாத நிலை பற்றிக் குறிப்பிட்டுவிட்டு மேலும் விளக்கியிருப்பதாவது:—

எத்தகைய எழுச்சி நாட்டில் ஏற்பட்டது என்பதை உணர முடிந்தது

"மதுரை மாநாடு சிறப்புப் பற்றி நான் தொடர்ந்து எழுதத் தேவையில்லாத நிலையை--சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நண்பர்கள் ஏற்படுத்தி விட்டார்கள்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கண்டனக் கணைகளுக்குப் பெரிதும் ஆட்பட்ட ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது மதுரை மாநாடுதான்; அதிலிருந்து, அந்த மாநாட்டின் எழிலும் ஏற்றமும்--உணர்ச்சியும் உத்வேகமும்--எத்தகைய எழுச்சியை நாட்டில் ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

சீறிவிழுந்த தலைவரை பாராட்டத்தான் வேண்டும்

மிக மிகப் பெருந்தலைவரான காமராசர் அவர்கள் கூட, மதுரைமாநாடு முடிந்த பிறகு--பந்தல் பிரிக்கப்பட்ட அந்த மைதானத்தின்மீது சீறி விழுந்திருக்கிறார்: 'மதுரை மாநாடு ஒரு நாடகம்' என்று வர்ணித்திருக்கிறார்; அது உண்மைதான்; உண்மையை ஒரு தடவையாவது சொன்னதற்காக நாம் அவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

'இலக்கியத்திலேயே கிடையாது' என வாதிட்டப் புலவராயிற்றே!

'நாடு + அகம்--நாடகம்' என்று விளக்கினால் அவருக்கும் புரியும் என்றே நான் கருதுகிறேன்; ஏனெனில், அவர் இலக்கியங்கள் பயின்ற மேதை என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயம் இல்லை!

தமிழாற்றல்--தமிழ் அறிவாற்றல் மொத்தம் படைத்தவர் காமராசர் என்பதிலும் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை; ஏனெனில், 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தியபோது, 'அந்தப் பெயர் இலக்கியத்திலேயே கிடையாது' என்று வாதிட்டப் புலவரேறு அவர்!

சிலப்பதிகாரத்தை இலக்கியமாக ஒப்புக்கொள்ளாத மாமேதை

'இமிழ் கடல் வரைப்பின் தமிழகம்' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது என்று நாம் கூறியபோது, அந்தச் சிலப்பதிகாரத்தை ஒரு இலக்கியமாக ஒப்புக்கொள்ளாத மாமேதை அவர்!

'நாட்டின் உள்ளத்தைப் பிரதிபலிப்பதே நாடகம்' என்று அவரது தமிழ் அறிவு ஒப்புக்கொள்ளுமேயானால், அது நான் செய்த பெரும் பேறுதான்!

(4-ம் பக்கம் பார்க்க)

வேலைதேடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

புதுடில்லி, ஆக. 29—
நாட்டில் வேலை தேடுபவர்களின் எண்ணிக்கை 1970-ம் ஆண்டில் 34.50 இலட்சமாக இருந்தது; 1971-ம் ஆண்டில் அது 42.20 இலட்சமாக உயர்ந்திருக்கிறது; அதாவது ஒரே ஒரு ஆண்டில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 7,07,000 அதிகரித்திருக்கிறது; இது 22.20 சதவிகித உயர்வாகும். கடந்த ஆறேழு ஆண்டுகளில் எப்போதும் இந்த எண்ணிக்கை இவ்வளவு அதிகமானதில்லை.

வேலை தேடுவோரின் எண்ணிக்கை மத்தியப் பகுதியில்தான் (மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம்) அதிக அளவு உயர்ந்திருக்கிறது; அங்கு 30.9 சதவீதம் அதிகமாகியிருக்கிறது.

தென் பகுதியில் வேலை தேடுவோரின் எண்ணிக்கை 1970–71-ம் ஆண்டில் 17 சதவீதம் உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் வேலை தேடுவோரின் எண்ணிக்கை 10 சதவீதம் முதல் 20 சதவீதத்துக்குள் அதிகமாகியது.

வேலை தேடுபவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 73 சதவீதம் பேர் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

மத்திய தொழிலாளர் நல அமைச்சகத்தைச் சேர்ந்த வேலை வாய்ப்பு இயக்குநர் அலுவலகம் 1970–71-ம் ஆண்டுகளின் வேலை வாய்ப்பு நிலைமை பற்றி நடத்திய தோர் ஆய்விலிருந்து இது தெரிய வந்திருக்கிறது.

வருமானத்துக்குப் பொருத்தமில்லாத அளவுக்குச் சொத்து

இரயில்வே அதிகாரி வீட்டில் சோதனை -- ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள சொத்து கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஆக. 28—
செகந்தராபாத்திலே, ஒரு மூத்த இரயில்வே அதிகாரியின் இல்லத்தையும் -- விஜயவாடாவில் அந்த அதிகாரியின் மனைவி பெயரில் இருந்த 'லாக்கர்' ஒன்றையும் புலனாய்வுத் துறையினர் (சி.பி.ஐ.) சோதனையிட்டு, சுமார் 2 இலட்சம் மதிப்புள்ள ரொக்கம் மற்றும் சொத்துக்களைக் கண்டுபிடித்தனர்.

பெங்களூரில் அந்த அதிகாரியின் மனைவி பெயரில் ஒரு வீடு இருப்பது தொடர்பான சான்றேடுகளும், சந்தேகத்துக்குரிய வேறு சில சான்றேடுகளும் கிடைத்தன.

அந்த அதிகாரி, அவரது வருமானத்துக்குப் பொருத்தமில்லாத அளவுக்குச் சொத்துக்களை வாங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வழக்கு ஒன்றைப் பதிவு செய்த பின்னர் சோதனை நடத்தப்பட்டது.

'கலை நுணுக்கமுள்ள பொருள்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கக் கூடாது'

மக்களவையில் ஈ. ஆர். கிருஷ்ணன் வலியுறுத்தல்

புதுடில்லி, ஆக. 28—
இந்தியாவிலுள்ள பண்டைக் காலப் பொருட்களையும் -- கலைப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வதற்கான விதிமுறைகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

கடவுள் சிலைகளைக் கடத்திச் செல்வதைத் தடுப்பதற்கும், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின்மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு, கழக உறுப்பினர் ஈ. ஆர். கிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தியாவிலிருந்து பழங்காலப் பொருட்களையும் – கலை நுணுக்கம் கொண்ட பொருட்களையும் ஏற்றுமதி செய்வதற்கு அடியோடு தடைவிதிக்க வேண்டும்; இந்தப் பொருட்கள் இந்தியாவின் பண்டையக் கலாச்சாரத்துக்கு ஆதாரங்களாக இருப்பவைகளாகும்; அந்நியச் செலாவணி (வெளிநாட்டுப் பணம்) கிடைக்கிறது என்பதற்காக அவைகளை விற்கக் கூடாது."

டாக்டரிடமிருந்து ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள போதை மருந்து பறிமுதல்

பம்பாய், ஆக. 28—
பம்பாயில் டாக்டர் வாசுதேவய்யா என்பவரிடமிருந்து ரூ 3 இலட்சம் மதிப்புள்ள 'எல்.எஸ்.டி.' என்னும் போதை தரும் மருந்தைப் போலீசார் கைப்பற்றியிருக்கின்றனர்.

1,53,000 பேர் கைது

23,000 போலீசார்-அதிகாரிகள் மீது நடவடிக்கை

பம்பாய், ஆக. 28—
மதுவிலக்கு வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்ததாக 1950-க்கும்—1956-க்கும் இடைப்பட்ட காலத்தில் 23,000 போலீசு கான்ஸ்டபிள்கள்—அதிகாரிகள் மீது மாராட்டிர மாநிலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தை மீறியதாக 1,53,000 பேர் இம்மாநிலத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா நிகழ்ச்சிகள்

ஆக. 30 காலை 8-30 மணி: ஏலகிரி மலை ஊராட்சி வரவேற்பு; 9-30 மணி: பொன்னேரி ஊராட்சி வரவேற்பு -- துணைக் குடும்ப நல விடுதி திறப்பு; 10-30 மணி: புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் பார்வையிடுதல்; நண்பகல் 12 மணி: பாலாறு மேம்பாலம் திட்டம் பார்வையிடுதல்; பிற்பகல் 3 மணி: ஆண்டியப்பனூர் சீரணிப் பேருந்து நிலையம் திறப்பு; பிற்பகல் 3-30 மணி: பாம்பாறு அணைக் கட்டுத் திட்டம் பார்வையிடுதல்; மாலை 5 மணி: ஜக்காம்பாறை நீர்த்தேக்கத் திட்டம் பார்வையிடுதல்; 6 மணி: ஜக்காம்பாறை பொதுமக்கள் வரவேற்பு.

கருத்து ஒற்றுமை காணப்படவில்லை

மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் மசோதா இப்போது இல்லை

புதுடில்லி, ஆக. 28—
மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கையை 524-லிருந்து 570 ஆக உயர்த்துவதற்கான அரசியல் சட்டத் திருத்த மசோதாவை இரு அவைகளிலும் இந்த வாரம் நிறைவேற்றி வைப்பது என்று திட்டமிட்டிருந்தனர்; ஆனால் அது, நாடாளுமன்றத்தின் மாரிக்காலக் கூட்டத் தொடரில்தான் (நவம்பர் மாதத் தொடரில்) எடுத்துக்கொள்ளப்படும்.

எதிர்க் கட்சித் தலைவர்களைத் தலைமையமைச்சர் சந்தித்துப் பேசியபோது இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

மக்கள் தொகை அதிகரித்திருப்பதால், மக்களவை உறுப்பினர் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டபோதிலும், எண்ணிக்கை பற்றிக் கருத்து ஒற்றுமை காணப்படவில்லை.

ஒரு இறுதி முடிவுக்கு வருவதற்கு முன்னால், தத்தம் கட்சிகளில் இது பற்றி விரிவாக விவாதிக்க அவகாசம் தேவை என்று எதிர்க் கட்சித் தலைவர்கள் கருதுகிறார்கள்.

வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ. 80 கோடி ஒதுக்கீடு

13,800 பட்டதாரிகள் பலனடைவர்

புதுடில்லி, ஆக. 27—
நாட்டில் ரூ. 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படவிருக்கும் பல்வேறு சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்தத் திட்டங்களின் கீழ் 4,000 பொறியியல் பட்டதாரிகளும், 6,800 பொறியியல் டிப்ளமாதாரர்களும், 3,000 வேளாண்மை மற்றும் பட்டதாரிகளும் பலனடைவர்.

அமைச்சருக்கு சக்தி இல்லை

விவாதத்துக்குப் பதிலளிக்கையில் கல்வியமைச்சர் நூருல் ஆசன் பதிலளிக்கையில், புகழ்பெற்ற கோகினூர் வைரம் பற்றி (இப்போது இங்கிலாந்தில் உள்ளது) குறிப்பிட்டதாவது:—

"உலகிலேயே பெரிய வைரமான கோகினூர் வைரம், முதலில் ஈரான் நாட்டில கண்டெடுக்கப்பட்டது என்று ஜெய்ப்பூர் ராணி காயத்ரி தேவி குறிப்பிட்டார்; இது தவறு; அந்த வைரம் ஆந்திர மாநிலத்தில் இருந்து வந்தது.

எனக்குச் சக்தியிருந்தால், இங்கிலாந்துக்கு ஓடிப்போய் கோகினூர் வைரத்தைத் திரும்பவும் இந்தியாவுக்குக் கொண்டுவந்து விடுவேன்; ஆனால், எனக்கு அந்தச் சக்தி இல்லையே!"

வீட்டு வசதித் திட்டத்திற்கு நிதியுதவி

தமிழகத்தின் கோரிக்கை -- டெல்லி நிராகரிப்பு

சென்னை, ஆக. 26—
"தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த ஆண்டு மானியமாக ரூ. 10 கோடி அளிக்குமாறு கோரியும் -- திட்டங்களைத் தீட்டியும் தமிழ்நாடு அரசு, மத்திய அரசுக்கு அனுப்பியது; ஆனால், இதனை வழங்குவதற்கு வசதியில்லை என்று தெரிவித்து -- தமிழக அரசின் கோரிக்கையை நிராகரித்து மத்திய அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில், வீட்டு வசதித் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்.

ஆப்பிரிக்க நாடுகளின்......

உகாந்தா -- காங்கோவின் நாடுகளின் பொருளாதாரப் போர்

அந்நியக் குடிமக்களைக் கட்டுப்படுத்துகின்றன

கம்பாலா, ஆக. 28—
ஆப்பிரிக்காவைச் சேர்ந்த நாடான உகாந்தா நாட்டின் அதிபர் இடி அமீன், உகாந்தாவின் பொருளாதாரப் போரின் முதல் கட்டமாகப் பிரிட்டன் -- இந்தியா -- பாகிஸ்தான் அல்லது வங்காள தேசக் குடியுரிமையுள்ள எல்லா ஆசியர்களையும் வெளியேற்ற முனைந்திருக்கிறார்.

இரண்டாவது கட்டமாக ஐரோப்பியர்களுக்கும் ஆசியர்களுக்கும் சொந்தமான கடைகள், ஆலைகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றை -- அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் -- உகாந்தா மக்கள் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்.

காங்கோவிலும் கட்டுப்பாடு

பிரேஜாவில், ஆக. 28—
ஆப்பிரிக்காவில மற்றொரு நாடான காங்கோவும் அந்நியக் குடிமக்களைக் கட்டுப்படுத்தும் பணியில் இறங்கியிருக்கிறது.

காங்கோ குடியரசில் அந்நியர்கள் யாரும் சான்று இதழ் வாங்காமல் எவ்வித வர்த்தகத்திலோ -- தொழில் முயற்சியிலோ ஈடுபடக் கூடாது என்று அதன் அதிபர் என்கௌபி அறிவித்திருக்கின்றார்.

"அவ்வாறு தொழில் தொடங்க விரும்பும் அந்நியர்கள், 5,000 ஆப்ரிக்கன் பிராங்குகளைச் செலுத்தி சான்று இதழ் பெறவேண்டும்; இதை மீறினால், 18,000 முதல் 36,800 பிராங்குகள் அபராதமோ அல்லது 2 மாதம் முதல் 7 மாதம் வரை சிறை தண்டனையோ விதிக்கப்படும்" என்று அவர் அறிவித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் நூலக ஆணைக்குழு

தவறான செய்திக்கு மறுப்பு

[இராமநாதபுரம் மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவரும் -- செயலாளரும் பின்வருமாறு அறிவிக்கின்றனர்.]

8—8—72-ம் நாள் வெளியான 'தினமலர்' நாளிதழில், இராமநாதபுரம் மாவட்ட நூலக ஆணைக் குழுவையும் -- அலுவலகத்தையும் களங்கப்படுத்தும் முறையில் பிரசுரிக்கப்பட்ட செய்தி முற்றிலும் தவறானது.

இராமநாதபுரம் மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கடந்த கூட்டம் -- அந்த ஏட்டில் வெளியானதுபோல் -- மதுரையில் வைத்து நடைபெறவில்லை; இராமேசுவரத்தில் 25—6—72 ல் நடைபெற்றது.

நிதி நிலைமை சரியில்லாததால் மாவட்டத்திலுள்ள எல்லா நூலகங்களையும் மூடுவதாகத் தீர்மானிக்கப்படவில்லை; மேலும் அவ்வாறு கூட்டத்தில் பேசப்படவும் இல்லை.

தவிர, பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்கள் பள்ளி வேலைகள் முடிந்த பின்னர் மாலையில் சிறிது நேரம் வாசகர்களுக்குப் புத்தகம் இரவல் கொடுத்து வாங்கும்படி மேற்படி பள்ளியில், பகுதி நேர நூலகங்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அந்த ஆசிரியர்கள் நடத்தும் பகுதி நேர நூலகங்கள் ஒன்றும் செவ்வையாக நடைபெறாததாலும் -- அது பொது மக்களுக்கு எவ்விதத்திலும் நன்முறையில் பயன்படாததாலும் -- அதை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது; அதனால் பொது மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை; எனவே, இந்நூலக ஆணைக் குழுவின் கீழ் நடைபெறும் நூலகங்களை மூடுவதாக எந்தவிதத் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை; அதுபற்றிய பேச்சுக்கே இடமில்லை என்றும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

மேலும் திருஞானம் எம்.எல்.சி. என்பவர் நூலக ஆணைக்குழுவில் எவ்வித உறுப்பினராகவும் இல்லை எனவும், அவர் தூதுக்குழுவிற்குச் செல்வதாகப் பேசப்படவில்லை."

'டிஸ்கோ' நிறுவனம் -- மத்திய அரசு ஏற்குமா?

உருக்குத்துறை அமைச்சரின் உறுதியற்ற பதில்

புதுடில்லி, ஆக. 28—
நாட்டின் நலனுக்கு ஏற்றது என அரசு கருதினால் டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனியையும் (டிஸ்கோ) இந்திய அரசு ஏற்குமாம்.

நாடாளுமன்ற மேலவையில் உருக்குத்துறை அமைச்சர் மோகன் குமாரமங்கலம் இதனைத் தெரிவித்தார்.

இந்தியன் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி நிர்வாக ஏற்பு மசோதா மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"தற்போது 'டிஸ்கோ' திறமையாக நிர்வகிக்கப்படுவதால் அதை மேற்கொள்வது பற்றி அரசு நினைக்கவில்லை; எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமா என்பது பற்றி நான் ஏதும் கூற இயலாது."

'தமிழ்நாடு முறையிடும் கோரிக்கை நியாயமானது -- நேர்மையானது'

'தலைமை நீதிமன்ற நீதிபதிகள் வரிசையில் தமிழகத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் இன்னமும் தரப்படவில்லை'

நாடாளுமன்ற மேலவையில் கே. ஏ. கிருஷ்ணசாமி வலியுறுத்தல்

புதுடில்லி, ஆக. 28—
அரசியல் சட்டத்தின் 30-வது திருத்த மசோதா மீது நாடாளுமன்ற மேலவையில் விவாதம் நடைபெற்றது.

எந்தவகையான வழக்குகளில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யலாம் என்பது பற்றியது இந்த மசோதாவாகும்.

இதன்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் கே. ஏ. கிருஷ்ணசாமி பேசியதாவது:—

தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது; இந்த நடவடிக்கை நீண்ட காலத்திற்கு முன்பே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

எனது மாநிலமானது தமிழ்நாட்டிற்குத் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் வரிசையில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்ற உண்மையை -- தமிழ்நாட்டைச் சேர்ந்தவன் என்ற முறையில் -- என்னால் எடுத்துக்காட்டாமல் இருக்க இயலவில்லை.

குறுகிய மாநில உணர்வு காரணமாக நான் இதனைக் குறிப்பிடவில்லை; எங்களது முறையீடும் கோரிக்கை நியாயமானதும் -- நேர்மையானதுமாகும்.

கடந்த 12 ஆண்டுகளாகச் சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து ஒருவர்கூடத் தலைமை நீதிமன்ற நீதிபதிகள் வரிசைக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற துரதிருஷ்டவசமான உண்மையிலிருந்தே இந்தக் கோரிக்கையிலுள்ள நியாயத்தை உணர முடியும்."

சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து ஒருவர் தலைமை நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றது கடைசியாக 1960-ம் ஆண்டிலேதான்.

சென்னை உயர் நீதிமன்றமானது ஒரு முக்கிய உயர் நீதிமன்றமாகும்; மற்ற உயர் நீதிமன்றங்களான பம்பாய் உயர் நீதிமன்றமும் கல்கத்தா உயர்நீதிமன்றமும் அவ்வப்போது தலைமை நீதிமன்றத்தில் தமக்குரிய பிரதிநிதித்துவத்தைப் பெற்று வருகின்றன.

எங்கள் மாநிலம் இந்தத் துறையிலும் பாரபட்சம் காட்டப்படுவதற்கு நியாயமான காரணம் எதுவும் இருக்க முடியாது.

இதன் தொடர்பாக நான் வலியுறுத்த விரும்புவதெல்லாம், பத்தாண்டுக் காலத்திற்கும் மேலாக முக்கிய உயர் நீதிமன்றங்களை இப்படிப் பாகுபாடாக நடத்திக்கொண்டிருக்கக் கூடாது; முடியாது என்பதுதான்.

ஆகவே, தலைமை நீதிமன்றத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைக்க மத்திய சட்ட அமைச்சர் இனியாகிலும் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருவார் என்று நம்புகிறேன்."

'100 கண் சிகிச்சை முகாம்கள் நடத்தினால்தான் பெரும்பாலோர் நலம் பெற இயலும்'

'கண் ஒளி பெறுவோரும் இயன்ற அளவில் நன்கொடை வழங்க முன்வர வேண்டும்'

நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் வேண்டுகோள்

சென்னை, ஆக. 28—
அம்பத்தூரிலுள்ள ஐவான்ஸ்டட் போர்டு மருத்துவ பணியில் கடந்த 14-8-72-ல் கண் சிகிச்சை முகாம் தொடங்கப்பட்டது; இந்த முகாமில் 403 பேருக்குக் கண்ணில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 403 பேர்களுக்கும் இலவச கண்ணாடி வழங்கும் விழா, செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்தவர்களை ஏ.எம். எம். அறக்கட்டளைக் குழு உறுப்பினர் எம்.வி. அருணாசலம் வரவேற்றுப் பேசினார்.

மூக்குக் கண்ணாடிகளை வழங்கி நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:—

"இந்த முகாமில் மேலும் 2,500 பேர் கண் நோயையொட்டி அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்; ஏறத்தாழ 3,000 பேர் இந்த முகாமில் கண் சிகிச்சை பெற்றிருப்பது நமக்கெல்லாம் மன நிறைவைத் தருகிறது.

தமிழ்நாட்டில் இதுபோல்குறைந்தது 100 முகாம்களாவது நடத்தினால்தான் பெரும்பாலான கண்நோயாளிகள் குணமடைய முடியும்; இப்போது 10 அல்லது 12 இடங்களில் நடந்து முடிந்த கண் சிகிச்சை முகாம்களில் மொத்தம் 8,000 முதல் 10,000 பேர் வரை கண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கின்றனர்; 50,000 அல்லது 60,000 பேர் கண்ணில் உள்ள பல்வேறு கோளாறுகளுக்காக சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 6 இலட்சம் பேர் கண் ஒளி இழந்து தவிக்கிறார்கள்; இவர்கள் அனைவருக்கும் கண் ஒளி வழங்க வேண்டுமானால், இங்கே முகாமில் சிகிச்சை பெற்றுத் திரும்புபவர்கள், தலா ரூ. 5 அல்லது ரூ. 10 நன்கொடை கொடுக்க முன்வர வேண்டும்."

எழும்பூர் கண் மருத்துவ மனை முதல்வர் டாக்டர் ஜே.இ. ஆபிரகாம், சட்டமன்ற உறுப்பினர்கள் கா. வேழவேந்தன், மா.வெ. நாராயணசாமி, எம். கோபால் ஆகியோரும் பேசினர்.

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

'அரசுக்கும்-ஆளுநருக்குமிடையே தர்மசங்கடமானதோர் சூழ்நிலையைச் சிலர் உருவாக்குகின்றனர்'

'விஷமத்தனமான தலைப்பிட்டு ஆளுநர் பேச்சை வெளியிட்டிருக்கின்றனர்'

'தவறான பிரச்சாரம்' செய்வதை எண்ணியே கவலைப்படுகிறேன் -- ஆளுநர் மனு பெறுவது பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை'

சென்னை, ஆக. 28 –
"ஆளுநர் மனு வாங்குவது பற்றி நான் குறை கூறவில்லை; 'அது தவறு' என்று நான் சொல்லவுமில்லை; ஆனால் மனு கொடுப்போர் வெளியில் வந்து ஆளுநருக்கும் -மாநில அரசுக்கும் ஏதோ விரோதம் இருப்பதுபோல் மேடையில் பேசியும்--பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டும், ஆளுநருக்கும்--அரசுக்குமிடையே தர்ம சங்கடமான சூழ்நிலையை உருவாக்குகின்றனர்.

'அண்மையில் ஒரு பத்திரிகையில், 'இந்த அரசை மாற்ற 5 ஆண்டுகள் தேவையில்லை--6 ஆண்டுகள் போதும்' என்று ஆளுநர் பேசியதாகத் தலைப்புக் கொடுத்து--ஆளுநர் பேச்சை வெளியிட்டிருந்தனர்; அந்தப் பத்திரிகைச் செய்தியை ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன்; 'நான் அப்படிப் பேசவில்லை; அந்தப் பத்திரிகை வேண்டுமென்றே விஷமத்தனமாகத் தலைப்பிட்டு வெளியிட்டிருக்கிறார்கள்' என்று ஆளுநர் என்னிடம் சொன்னார்.

"ஆகவே, ஆளுநர் ஷா மனு பெறுவது பற்றி எனக்கு எப்போதும் ஆட்சேபனையில்லை; ஆனால் விஷமக்காரர்கள் சிலர் தவறான பிரசாரத்தைச் செய்கிறார்கள் என்பதை எண்ணித்தான் கவலைப்படுகிறேன்; ஆளுநரிடம் தரப்படும் மனுக்கள் அவருடைய அலுவலகத்திலிருந்து எனக்குத்தான் அனுப்பிவைக்கப்படுகின்றன"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் விளக்கிக் கூறினார்.

கேள்வி:—"ஆளுநரை 'ஒற்றர்' என்று அமைச்சர்கள் பேசியிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கிறதே?"

முதல்வர்:—"அந்தப் பத்திரிகைக் குறிப்பை ஆளுநர் எனக்கு அனுப்பினார்; சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதில் கடிதம் எழுதினார்கள்."

அணி திரட்டுவது அவசியமில்லை

கேள்வி:—"அரசு ஊழியர்களுக்கு ரூ. 10 ஊதிய உயர்வு அளித்தீர்களே -- அதற்கு மத்திய அரசு உதவி கிடைத்ததா? அதுபற்றி வலியுறுத்துவீர்களா?"

முதல்வர்:—"இதுபற்றி முதல்வர்கள் மாநாட்டில் பேசினால் போதுமானது; இதற்காகத் தனி மாநாடோ அணி திரட்டுவதோ அவசியமில்லை."

பொதுக்குழு எப்போது?

கேள்வி:—"பொதுக் குழு எப்போது கூடும்?"

முதல்வர்:—"நாடாளுமன்றம் நடந்துகொண்டிருக்கிறது; அது முடிந்தபின், கோவையில் பொதுக்குழு கூடும்.

மாவட்ட தி. மு. க. மாநாடு

கேள்வி:—"அடுத்த மாவட்டத் தி. மு. க. மாநாடு எங்கே -- எப்போது நடக்கும்?

முதல்வர்:—"தென்காடு மாவட்டத்தில் நடக்கும்; மழைக் காலமெல்லாம் முடிந்த பிறகுதான், இடத்தைப் பற்றி முடிவெடுக்கப்படும்."

நோக்கம் அதுதான்

கேள்வி:—"சிதம்பரத்தில் நீங்கள் பேசும்போது, 'நம்மை யாராலும் அழிக்க முடியாது -- நம்மைத் தவிர' என்று பேசியிருக்கிறீர்களே -- அதன் நோக்கம் என்ன?"

முதல்வர்:—"கழகத்தில் ஒற்றுமை குலையக்கூடாது என்பது தான் நோக்கம்; எல்லாக் கழக அமைப்புகளும் மேலும் ஒற்றுமையாக இருந்து வலிவு பெற்றிட வேண்டும் என்பதுதான் நோக்கமாகும்."

ஆளுநர் பதவி பற்றி விவாதிக்க அவசியமில்லை

கேள்வி:—"ஆளுநர் பதவி பற்றிப் பொதுக் குழுவில் விவாதிக்கப்படுமா?"

முதல்வர்:—"மாநில சுயாட்சி பற்றிப் பேசுகிறோம்; ஆகவே அங்கே ஆளுநர் பதவி பற்றி விவாதிக்க அவசியமில்லை."

இராசமன்னார் குழு அறிக்கை மீது விவாதம் எப்போது?

கேள்வி:—"இராசமன்னார் குழு அறிக்கை பற்றி எப்போது சட்டமன்றத்தில் விவாதிக்கப்படும்?"

முதல்வர்:—"அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் பெரும்பாலும் விவாதிக்கப்படலாம்."

சிறப்புக்குரியதாயிற்றே!

கேள்வி:—"மதுரை நகரியம் மாநகராட்சியானபோது, அந்த உறுப்பினர்களே தொடர்ந்து மாநகராட்சி உறுப்பினர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டனர்; ஆனால், திருச்சியில் பல்லவபுரம்—துறையூர் போன்ற நகரியங்கள் நகராட்சிகளாக ஆனபோது, அதன் உறுப்பினர்கள் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்படாமல், தனி அதிகாரி நியமிக்கப்பட்டாரே?"

முதல்வர்:—"மாநகராட்சி என்பது சிறப்புக்குரியது."

அவர் என்ன பேசினாரோ -- இவர்கள் என்ன போட்டனரோ?

கேள்வி:—"மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம், 'தைரியமிருந்தால் என்னைக் கைது செய்' என்று பேசியதாகச் – செய்தி வெளிவந்ததே?"

முதல்வர்:—"பத்திரிகைகள் எப்படியெல்லாமோ செய்திகளைத் திரித்துப் போடுகின்றன; அவர் என்ன பேசினாரோ—இவர்கள் என்ன போட்டார்களோ—எனக்குத் தெரியாது."

குறுவை நெல் விலை

கேள்வி:—"குறுவை நெல் விலை அதிகரிப்புப் பற்றி மாநில அரசின் கொள்கை என்ன?"

முதல்வர்:—"அது, மத்திய அரசு தொடர்புடைய ஒன்று; அவர்கள் முடிவெடுத்தால் அதன்படி மாநில அரசு செயல்படும்."

எச்சரிக்கையுடன் அதிகாரிகள் எப்போதும் பேச வேண்டும்

கேள்வி:—"தமிழ்நாட்டு மூத்த ஐ. ஏ. எஸ் அதிகாரி ஒருவர் கேரள கவர்னர் விஸ்வநாத தாஸ் ஐயப்பன் கோவிலுக்குப் போவதைப் பற்றிக் கூறுகையில், 'அது, பகுத்தறிவுள்ள செயலாகாது' என்று பேசியிருக்கிறாரே?"

முதல்வர்:—"பிற மாநில கவர்னரைப் பற்றி மட்டுமல்ல -- நமது மாநிலத்தில் உள்ளவர்களைப் பற்றியும்கூட மிக எச்சரிக்கையாகவே பேச வேண்டும்; பொதுவாகவே இன்னொருவரைப் பற்றிப் பேசும்போது மெத்த எச்சரிக்கையுடன் பேச வேண்டும்."

எப்படியும் பேசுவார் அவர்!

கேள்வி:—"பாடப் புத்தகங்களில் கட்சிப் பிரச்சாரம் செய்யப்படுவதாகக் காமராசர் கூறியிருக்கிறாரே?"

முதல்வர்:—"அவர் எப்படியும் பேசுவார்."

செப். 15: பேரறிஞர் அண்ணா 64-வது பிறந்த நாள் விழா

சென்னையில் சிறப்புறக் கொண்டாட ஏற்பாடு

மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பல்வேறு குழுக்கள் நியமனம்

சென்னை, ஆக. 28—
சென்னை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம் 26-8-72-ல் அண்ணா சாலையிலுள்ள தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

சென்னை மாவட்டச் செயலாளர் திரு. நீலநாராயணன், அறிஞர் அண்ணா அவர்களின் 64-வது பிறந்த நாள் விழாவினைப் பெருஞ் சிறப்புடன் கொண்டாட வேண்டிய சீரிய முயற்சியில், மாவட்டத்தின் பகுதி – கிளை – சார்பு – துணைமன்ற அமைப்புகள் அனைத்தும் முனைந்து ஈடுபட வேண்டிய இன்றியமையாமையை விளக்கினர்.

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவினைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கான வழிமுறைகள் பற்றிப் பகுதிச் செயலாளர்களும் -- உறுப்பினர்களும் கருத்தறிவித்ததுடன், அவைகளைச் செயல்படுத்திச் சிறப்பிப்பதற்காகக் கீழ்க்காணும் உறுப்பினர்கள் கொண்ட பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன:—

நிதிக் குழு

டி.கே. கபாலி (மாவட்டப் பொருளாளர்)—தலைவர்
சா. கணேசன் எம்.சி. (முன்னாள் மேயர்)
வி. முனுசாமி எம்.சி. (முன்னாள் மேயர்)
ஆர். ஆறுமுகம் எம்.சி.
தி. சு. நல்லதம்பி எம்.சி.
பவளவண்ணன் எம்.சி.
திருமதி காமாட்சி செயராமன் (மேயர்)
என். வி. என். சோமு (துணை மேயர்)
பி. ஏ. என். இராசரத்தினம்
அ. துளசிங்கம் எம்.சி.
வை. பாலசுந்தரம் எம்.எல்.ஏ. (முன்னாள் மேயர்)

ஊர்வலக் குழு

ஆர். டி. சீதாபதி (மாவட்டத் துணைச் செயலாளர்)தலைவர்
த. வெங்கடேசன் எம்.சி.
ப. ஆசைமுத்து
பி. ஏ. என். இராசரத்தினம்
கே. எஸ். இலக்குமணன்
ஆர். ஆறுமுகம் எம்.சி.
அ. சுப்பிரமணியம் எம்.சி.
வெ. தணிகாசலம் எம்.சி.
தி. சி. ஜீவரத்தினம் எம்.சி.
சோ. மா. இராமச்சந்திரன்
ஆ. ஜார்ஜ்
மு. வரதராசன்
ஆ. சி. துளசிங்கம் எம்.சி.
வை. பாலசுந்தரம் எம்.எல்.ஏ.

பணிக் குழு

அ. செல்வராசன் (மாவட்ட அவைத் தலைவர்)—தலைவர்
ஆ. மு. நாராயணன்
மா. மோகனரங்கம்
கொ. நாகராசன்
எ. உலகநாதன் எம்.சி.
இரா. விஜயகம்
சோ. மா. இராமச்சந்திரன்
கே. பார்த்தசாரதி எம்.சி.
மு. இராமையா
ஏ. எஸ். மணிமாறன்

விளம்பரக் குழு

மு. சண்முகம்
கோடம்பாக்கம் குமார்
ஆ. வி. அகிலன்

தனியார் கல்லூரிகள் போக்கு

அரசின் விதி முறைகளுக்கு முரணுகச் செயல்படுவதா?

மானியத்தை இழக்கும் நிலை ஏற்படக்கூடும்

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, ஆக. 28—

"பல தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்களுக்கான வேலை நேரம் -- ஊதிய நிர்ணயம் -- வேலைக்கான உத்தரவாதம் ஆகியவை தொடர்பாக அரசு வகுத்த விதி முறைகள் சரிவர நிறைவேற்றப்படுவதில்லை; விதி முறைகட்கு முரணுன நடவடிக்கைகளைப் பல தனியார் கல்லூரிகள் மேற்கொண்டிருக்கின்றன; தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பலரிடமிருந்து அரசுக்கு இது குறித்து முறையீடுகள் வந்துள்ளன.

"சில தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்கட்கு ஆண்டுதோறும் வேலை புதுப்பிக்கப்படுகிறது; இதனுல் அவர்களுடைய வேலை நிரந்தரமாக்கப்படாமலிருப்பதுடன், வேலை நீடிக்கும் என்பதற்கான உத்தரவாதமும் இல்லாமற்போய்விடுகிறது.

"இவ்வாறு வேலையில் உத்தரவாதம் கிடைக்கப்பெருத தனியார் கல்லூரி ஆசிரியர்கள், 'அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டுத் தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்' என்று முறையிட்டிருக்கிருர்கள்.

"தனியார் கல்லூரிகள் இத்தகைய முறைகேடுகளில் ஈடுபடுமேயானுல் அது கல்லூரிகளுக்கோ -- மாணவர்களுக்கோ நல்லதல்ல; தமிழக அரசு தற்போது தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தில் தலையிடுவதில்லை, கல்லூரிகள் நடைபெறும் பொருட்டு மானியம் வழங்குவதோடு அரசு ஒதுங்கிக்கொண்டுவிடுகிறது; நிர்வாகம் தொடர்பான விவகாரங்கள் அனைத்தையும் பல்கலைக் கழகத்தின் பொறுப்பிலேயே அரசு விட்டுவிடுகிறது.

"ஆனுல், அரசு வகுத்துள்ள விதிமுறைகளுக்கு முரணுன நடவடிக்கைகளில் தனியார் கல்லூரிகள் ஈடுபடுமேயானுல், அத்தகைய கல்லூரிகட்கு மானியம் வழங்குவதை நிறுத்திவிடும் உரிமையும் -- அதிகாரமும் முற்றிலும் அரசுக்கே உண்டு; ஆகவே தனியார் கல்லூரிகள், ஆசிரியர்களின் வேலை நிர்ணயத்திலும் -- ஊதிய விகிதத்திலும் அரசு வகுத்துள்ள விதிமுறைகளைச் சரிவரக் கடைபிடிக்குமாறு வேண்டுகிறேன்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தனியார் கல்லூரி நிர்வாகிகள் சங்க மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது :—

அரசு அறிவுறுத்தல்

"கல்லூரிகளில் 49 சதவிகித இடங்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

தனியார் கல்லூரிகள் இந்தச் சலுகையினைத் தாழ்த்தப்பட்டோருக்கும் -- பிற்பட்டோருக்கும் வழங்குவதில் சிறிதளவும் தவறிவிடக் கூடாது.

தனியார் கல்லூரிகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கமும் -- விருப்பமுமாகும்.

நமது நாட்டில் மேல்மட்டக் கல்வி வளர்ச்சியுறச் செய்வதில் தனியார் கல்லூரிகளுக்கும் சிறப்பான பங்கு இருக்கிறது.

இன்று நமது மாநிலத்தில் உள்ள மொத்தம் 176 கல்லூரிகளில் 124 கல்லூரிகள் தனியார் மூலமே நடைபெறுகின்றன; 52 கல்லூரிகளில் மட்டுமே அரசின் வசம் உள்ளது.

மேல் மட்டக் கல்விக்கு எனப் பத்தாண்டுகட்கு முன்பே அரசு ஒதுக்கிய மானியத் தொகை ஒரு கோடி ரூபாய்தான்; இன்று அது பத்துக் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது; ஏறத்தாழ 1.80 கோடி மாணவர்கள் இன்று கல்லூரியில் கல்வி கற்று வருகிருர்கள்.

பெற்ருேர்கள் புகார்

கல்லூரிகள் திறக்கப்படும் நேரத்தில், பெற்ருேர்களிடமிருந்து வரும் புகார் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளில் சேர்க்கும்போது அதற்குப் பிரதியுபகாரமாகக் கல்லூரி நிர்வாகத்தினர் நன்கொடை கேட்கிருர்கள் என்பதாகும்.

கட்டாய நன்கொடை வசூல் செய்து மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் முறை பல தனியார் கல்லூரிகளில் கையாளப்பட்டு வருகிறது; கட்டாயநன்கொடை வசூல குறித்து ஆண்டுதோறும் பெற்ருேர்களிடமிருந்து அரசுக்குப் புகார்கள் வருகின்றன; இந்தப் பிரச்சினை ஆண்டுக்கு ஆண்டு தீவிரமடைந்து வருகிறது; இதனுல் அரசும் -- பொதுமக்களும் பெரிதும் கவலையுற நேரிடுகிறது.

கட்டாய நன்கொடை வழக்கத்தைத் தனியார் கல்லூரிகள் விட்டுவிட வேண்டும்."

அரச மானியங்கள் ரத்துக்கு எதிராக 'ரிட்' மனுக்கள்

புதுடில்லி, ஆக. 29—

அரச மானியங்கள் மற்றும் சலுகைகளை ரத்து செய்யும் அரசியல் சட்டத் திருத்தங்களுக்கு எதிராக முன்னுள் மன்னர்கள் இருவர் தாக்கல் செய்த 'ரிட்' மனுக்களைத் தலைமை நீதிமன்றம் விசாரணைக்கு அனுமதித்திருக்கிறது.

கலைவாணர் நினைவுநாள் விழா

அமைச்சர் க. அன்பழகன் பங்கேற்கிருர்

சென்னை, ஆக. 29—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் 16-வது நினைவு நாள் விழா, நாளை (புதன்) சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

மைலாப்பூர் சீனிவாச சாஸ்திரி அரங்கில் மாலை 6 மணியளவில் விழா தொடங்குகிறது.

எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன, விழாவிற்குத் தலைமை தாங்குகிருர்.

விழாவில் அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கலந்து கொள்கிருர்.

மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம், டி. கே. சண்முகம், கவிஞர் எஸ். டி. சுந்தரம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

விழாவில் கலைவாணர் மிகவும் விரும்பிப் பாடும் விகட நிகழ்ச்சி ஒன்றை குடந்தை சங்கர் குழுவினர் நடத்துகின்றனர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அந்த மாநாட்டு நாடகத்தில் எனக்குத் திடீரென உடல் நலிவு ஏற்பட்டது உச்சகட்ட காட்சி -- என்று அருமைத் தலைவர் காமராசர் பேசியதாக 'இந்து' பத்திரிகையிலே படித்தேன்; என் உடல் நலிவு, காமராசருக்கு கேலிக்குரிய ஒன்ருகிவிட்டது.

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களில், காமராசர் உட்கார்ந்து கொண்டுதான் பேசினுர் -- என்று நான் கேள்விப்பட்டு வேதனையடைந்தேன்; நின்றுகொண்டு பேசுகின்ற அளவுக்கு அவர் உடல் நலத்தோடும்--தெம்போடும் நீண்ட நாள் வாழ வேண்டுமென்பதுதான் என் ஆசை; ஆனுல் அவரோ, நான் பிரக்ஞையற்று மயங்கி விழுந்ததை, 'நடிப்பு' என்று கிண்டல் செய்திருக்கிருர் -- பரவாயில்லை; என்னை அவர், 'ஒரு சிறந்த நடிகன்' என்ருவது ஒத்துக்கொண்டுள்ளாரே -- அதற்கு நான் நன்றி கூறத்தான் வேண்டும்.

நான் எதிர்பார்த்தது ஒன்று -- கிடைத்த பதில் வேறு!

நான் உடல் நலிவுற்றதும் -- உண்மையாகவே சொல்லுகிறேன் -- அவரிடமிருந்து ஒரு தொலைபேசி விசாரணையை நான் எதிர்பார்த்தேன்; 'என்ன-மதுரை மாநாட்டில் உடம்பு சுகமில்லையாமே -- எப்படி இருக்கிறது இப்போது' என்று கேட்பார் என்று எதிர்பார்த்தேன்; அவர்தான் 'நாடகம் -- நடிப்பு' என்று கூறிவிட்டாரே! அது தெரியாமல் நான் எதிர்பார்த்தது மடமை தானே!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

திருச்சி வட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு:

"திருச்சி வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் 30—8—72 மாலை 4 மணியளவில், டவுன் ஹாலில் நடைபெறும்; ஆய்வுக்கு வருபவை: பேரறிஞர் அண்ணு பிறந்தநாள் விழா; செயலாளரால் கொண்டுவரப்படும் இதர பிரச்சினைகள்; உறுப்பினர்கள் அனைவரும் தவருது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று, வட்டச் செயலாளர் மு. நடராசன் அறிவிக்கிருர்.

சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளி திறப்பு

30—8—72 மாலை 5.30 மணிக்கு மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையில்—மயிலாப்பூர் -- திருவள்ளுவர் நகர் லஸ் சாலையிலுள்ள (நாகேசுவர சிசு விகார்) மாநகராட்சித் துவக்கப் பள்ளியை மாநகராட்சி வரி விதிப்பு—நிதி நிலைக் குழு உறுப்பினர் எம்.மைனர் மோசஸ் முன்னிலையில்—மாநகராட்சி வரி விதிப்பு—நிதி நிலைக் குழுத் தலைவர் வி.முனுசாமி துவக்கி வைப்பார்; வரவேற்பாளர்கள்: ஜி லட்சுமிபதி, த. சாரங்கன்.

விருத்தாசலம் வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு:

"31—8—72 மாலை 3-மணியளவில் திட்டக்குடி மேல வீதியிலுள்ள பொ. வைத்தினுதன் இல்லத்தில், விருத்தாசலம் வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்களின் கூட்டம் வி. இராமசாமி தலைமையில் நடைபெறும்; ஆய்வுக்கு வருபவை: பேரறிஞர் அண்ணு பிறந்த விழா -- கழக வளர்ச்சி; உறுப்பினர்கள் அனைவரும் தவருது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று வட்டச் செயலாளர் தரு. இராசவேலு அறிவிக்கிருர்.

தொழிலாளர் ஆய்வு நிறுவனம்

சென்னையிலும் நிறுவப்படும்

சென்னை, ஆக. 29—

பம்பாயில் தொழிலாளர் ஆய்வு நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருவதைப் போல், தமிழ்நாட்டிலும் ஒரு நிறுவனம் விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

தொழிலாளர்களுக்குத் தொழில் சட்டங்களைக் கற்பிப்பது—தொழில் உறவுகளை விளக்குவது போன்ற பணிகளில் ஈடுபட்டு, தொழிற்சங்கப் பணிகளைச் செம்மைப்படுத்துவதே இந்த நிறுவனத்தின் குறிக்கோளாகும்.

தொழிலாளர்கள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் பெறவும் இந்நிறுவனம் பயன்படும்.

ஒரு பேராசிரியர் -- இயக்குநரின் பொறுப்பில் இந்நிறுவனம் இயங்கும்; அவருக்கு ஒரு தொழிலாளர் நலத் துணை இயக்குநரும்—ஏனைய ஊழியர்களும் உதவியாக இருப்பர்.

காவிரி நீர்த் தகராறு வழக்கு

திரும்பப்பெற தமிழக அரசுக்கு அனுமதி

புதுடில்லி, ஆக. 29—

காவிரி நீர்ப் பிரச்சினையில், மைசூர் அரசுக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தலைமை நீதிமன்றத்தில் முன்பு வழக்குத் தொடர்ந்திருந்தது; இதற்கிடையில், தமிழ்நாடு--மைசூர் -- கேரளம் ஆகிய மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டதால், அந்த வழக்கைத் திரும்பப்பெறத் தலைமை நீதிமன்றத்தில் தமிழக அரசு அனுமதி கோரியது; அதன்படி வழக்கைத் திரும்பப்பெற நீதிமன்றம் அனுமதியளித்தது.

"தேவைப்பட்டால், புதிய வழக்கு தொடரத் தமிழக அரசுக்கு அரிமை உண்டு" என்றும் தலைமை நீதிமன்றம் தெரிவித்தது.

கங்கை--காவிரி இணைப்பு ஆய்வுப்பணி

புதுடில்லி, ஆக. 29—

"கங்கையையும்— காவிரியையும் இணைக்கும் தொழில் நுட்ப—பொருளாதாரச் சாத்தியக்கூறு குறித்து ஐ. நா. நிபுணர்களின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது; எனினும், இது சம்பந்தமான ஆய்வுப் பணியை நடப்பு ஆண்டில் தொடங்குவது இயலக்கூடியதேயாகும்"

என்று பாசன--மின்சாரத்துறை அமைச்சர் பி.என். குரீல், நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மலிவு விலையில் சத்து உணவு

புதுடில்லி, ஆக. 29—

15 காசு விலையில் 100 கிராம் கொண்ட சத்துணவுப் பொட்டலத்தை மைசூர் மத்திய உணவு ஆய்வுக் கழகம் தயாரித்திருக்கிறது; அதில் 16 கிராம் புரதச் சத்து இருக்கும்—100 கலோரி சக்தி அளிக்கும்.

மக்களவையில் வேளாண்மைத் துறை துணையமைச்சர் ஏ. பி. ஷிண்டே இதனைத் தெரிவித்தார்.

அனைத்து நாட்டுச் சட்ட வல்லுநர் குழுவின் போக்கு

உலக நியதியை இந்தியா சுட்டிக்காட்டுகிறது

புதுடில்லி, அக். 29—

"இந்தியாவில் கைதியாக இருக்கும் பாகிஸ்தான் இராணுவத்தினரை உடனடியாக விடுதலை செய்யும் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நாட்டு சட்ட வல்லுநர் குழு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டிருப்பது துரதிருஷ்டவசமானதாகும்" என்று இந்தியா கருத்தறிவித்திருக்கிறது.

நாட்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் ஆபத்துக்கள் நீங்கும் வரையில் போர்க் கைதிகளை விடுதலை செய்யாமலிருப்பது, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உலக நியதியாகும்" என்று இந்தியா சுட்டிக்காட்டியிருக்கிறது.

மேலும், இந்தியத் துணைக் கண்டத்தில் நிலையான அமைதி ஏற்படும் பொருட்டு நடைபெற்றுவரும் முயற்சிகளையும் குழுவின் கவனத்திற்கு இந்தியா கொண்டுவந்திருக்கிறது.